# MDCRC -யின் 8 – ம் வருட டுசீன் விழிப்புணர்வு தினம்




September 8, 2021 தண்டோரா குழு

உலக டுசீன் விழிப்புணர்வு தினம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 7 -ம் தேதி உலக அளவில் கடைபிடிக்கப்படுகிறது. இத்தினம்
தமிழ்நாட்டில் கோவையில் இயங்கி வரும் மரபணு பரிசோதனை ஆலோசனை ஆதரவு மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (MDCRC) 2014 – ம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த வருடம் போன்று இவ்வருடமும் இணையம் மூலமாக குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் சிறப்பு விருந்தினர்கள், மருத்துவ குழு உறுப்பினர்கள், நண்பர்கள், ஊழியர்கள் என அனைவரையும் ஒருங்கிணைத்து
செப்டம்பர் 7 -ம் தேதி முதல் 9 -ம் தேதி
வரை மூன்று நாள் விழாவாக சிறப்பாக நடைபெற்றது.

செப்டம்பர் 7 – ம் தேதி காலை 9 மணிக்கு கடந்த வருடங்களின் முன்னோட்ட வீடியோவுடன் தொடங்கப்பட்ட இவ்விழா மாலை 7 மணிக்கு நீயா நானா புகழ் கோபிநாத்தின் சிறப்புரை மற்றும் அதைத்தொடர்ந்து டாக்டர்
லக்ஷ்மி, ஸ்ரீதேவி(மனநல நிபுணர்),
டாக்டர் நூருல் அமின் ஷாஹித் மற்றும் 400 பார்வையாளர்கள் வரை கலந்து கொண்டு கேள்வி பதில் கலந்துரையாடலுடன் முடிவு பெற்றது.

இவ்வருட டுசீன் தினத்தின் நோக்கம் "டுசீன் இளைஞர்களின் வாழ்வியல்". செப்டம்பர் 8 -ம் தேதி காலம் காத்திரு காயம் பெறுத்திரு என்ற குறும்படம் MDCRC-யோவால் தயாரிக்கப்பட்டு
ஒளிபரப்பப்பட்டது. டுசீன் நோயால் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் குடும்பத்தில் நிகழும் சில உணர்வுகள் மிக அழகாக இப்படத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

## டிரெய்லர்கள் & டீஸர்கள்

விஷால் சக்ரா படத்தின் டிரைலர் வெளியீடு !



ஜெயம் ரவி நடிப்பில் உருவான பூமி படத்தின் டீசர் !



மோகன்லால் நடிப்பில் உருவான மரைக்காயர் அரபிக்கடலின் சிங்கம்' படத்தின் ட்ரெய்லர் !



## வைரல் வீடியோக்கள்



மலைப்பாம்பை உயிருடன் பிடித்த பெண் – வைரலாகும் வீடியோ

VIEW ALL

## கோயில்கள்



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பிகை சமேத அகஸ்தீஸ்வரர் சுவாமி

VIEW ALL